ஒவ்வொரு மாதமும் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை உட னுக்குடன் விற்பனை செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை களை மேற்கொண்டு உள்ளது.

குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கட்டிடங்கள்.

*9917—திரு. மு. க. ஸ்டாலின் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

ஆயிரம்விளக்குத் தொகுதியில் குடிசை மாற்று வாரியத் தின் சார்பில் கட்டிடங்கள் கட்டுவதற்கு எந்தெந்த இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆயிரம் விளக்குத் தொகுதியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக 1990—91ஆம் ஆண்டில், குடிசை மாற்று வாரியக் கட்டிடங்கள் கட்டுவதற்கு, டாக்டர் தாமஸ் சாலை, சத்திய மூர்த்தி நகர், பருவா நகர், எம். கே. இராதா நகர், அருந்ததியர் நகர், பத்திரிகரை, சர்தார் சிங் தோட்டம், வடக்கு கிரியப்பா சாலை மற்றும் மாம்பலம் விரிவாக்கம் போன்ற இடங்களைத் தேர்வு செய்துள்ளது.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் விளக்கு தொகுதியில் 125-வது வட்டம் முதலி யாண்டான் தோட்டம், 123-வது வட்டம், கோமையப்பன் தெரு, ஆகிய பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் வீடுகளைக் கட்ட முடியாத அளவிற்கு சிலர் தனிப்பட்ட முறை யில் '' ஸ்டே '' வாங்கி இருப்பதாகத் தெரிகிறது. அது குறித்து அரசு மேற்கொண்டு உள்ள நடவடிக்கைகளை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் இடங்களை ஆர்ஜிதம் செய்து, குடிசை மாற்று வாரியம் கட்டிடம் கட்டுவதற்கு இப்படிப்பட்ட இடங்கள் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. மாண்பு மிகு உறுப்பினர் குறிப்பிட்ட இரண்டு இடங்களையும், வழக்கு மன்றத்தில் குடிசை மாற்று வாரியம் கையகப்படுத்துகின்ற வகை யில் வழக்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இடம் கிடைத்தவுடன், கட்டுமானப் பணி தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1991 சனவரி 21]

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் விளக்குத் தொகுதி 108-வது வட்டம் வள்ளுவர் குப்பம், அதேபோல், 104-வது வட்டம் சர்தார்சிங் கார்டன் ஆகிய பகுதிகளில், மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களை நம்முடைய குடிசை மாற்று வாரியத்திற்கு வழங்கியிருப்பதாக குறிப்பு சொல்கிறது. அது உண்மையா ? அது உண்மையெனில், அது குறித்து நம்முடைய அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இரண்டு இடங்களை, மாநகராட்சி வழங்கியிருக்கிறது. கட்டிடம் கட்டுவது குறித்து குடிசை மாற்று வாரியத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1—

திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதி.

வினா எண். 133—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வடஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

2—

கோவை மாநகராட்சி மன்றம்.

வினா எண். 326—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவை மாநகரில் செல்வபுரம், கல்லார்மேடு, பாளையன்தோட்டம், லிங்கேகவுடர் தோட்டம் ஆகிய இடங்களில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால், வீட்டுவசதி